ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2261/58 - 2022 ජනවාරි මස 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.01.06
*2261/58 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆந் திகதி விழயாக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுகங்கள் மற்றும் விமானநிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்*

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (3) ஆம் உட் பிரிவின் மூலம் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகிய நான், இக் கட்டளை மூலம், 2020 ஒற்றோபர் 26 ஆந் திகதிய 2199/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட கட்டளையை, அக்கட்டளையின் (கி) துணைப் பந்திக்காக பின்வரும் துணைப் பந்தியைப் பிரதியீடு செய்வதன் ஊடாகத் திருத்தியமைக்கின்றேன்.

(கி) சுகாதாரம் எனும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் விதப்புரையின் மீது, நிதி எனும் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அங்கீகரிக்கப்பட்ட, ஏதேனும் தொற்றுநோய் அல்லது பொதுச் சுகாதார அவசரநிலையை எதிர்கொள்ளும் பொருட்டு, சுகாதார சேவைகளை வழங்குவதற்காக ஓர் அரசாங்க மருத்துவமனைக்கு அல்லது சுகாதார அமைச்சிற்கு நன்கொடையளிக்கப்பட்ட மருத்துவ சாதனங்கள், எந்திரத்தொகுதி, உபகரணங்கள், துணைக் கருவிகளும் அவற்றின் பாகங்களும், மருத்துவமனைத் தளபாடங்கள், ஔடதங்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள்.

இக் கட்டளை 2022, சனவரி 06 ஆந் திகதி முதல் பயன்வலு உடையதாதல் வேண்டும்.

**பசில் ராஜபக்ஷ,**
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2022, சனவரி 06*

EOG *1- 0153*